சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.No. 302/2017

பெயர்: தங்கவேல் 30.09.2021

2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு தெரியாது. சம்பவசமயத்தில் எனதுமகன் வாழைத்தார் ஏற்றிச்சென்ற சரக்கு ஆட்டோவில் கேபின் உள்ளே அமர்ந்து பயணம் செய்தார்என்றால்சரிதான். எனது வயலிலுள்ள வாழைத்தார் மற்றும் வேறு விவசாயிகளின் வாழைத்தார்களை ஏற்றிச் சென்றதால் எனது மகன் அந்த ஆட்டோவில் சென்றார். எனது மகன் வாழைத்தார் வியாபாரம் செய்து வந்ததை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல்செய்துள்ளேனா என்றால்இல்லை. அந்த ஆட்டோவில் ஏற்றிச் சென்ற வாழைத்தார் எங்களுடையது என்பதைக் காட்டக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த ஆட்டோவில் எனதுமகன் இலவசமாக வேறு எங்கோ செல்வதற்கு பயணம் செய்தார் என்றால்சரியல்ல. இலவசமாக பயணம் செய்த நபர்களுக்கு பாலிசி விதிகளின்படி நஷ்டஈடு வழங்கமுடியாது என்றால்சரியல்ல. எனதுமகன் சென்ற ஆட்டோவின்ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர்உரிமம் இல்லாததால் அந்த ஆட்டோவின் உரிமையாளர்தான் நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. ஆட்டோவின் டயர் வெடித்ததால் நிலைத்தடுமாறி எதிரில் வந்த வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது என்றால்சரிதான். எதிரில் வாகனம் வராமல் வேறு எதிலும் மோத ஆட்டோ நின்றிருந்தால் உயிர்சேதம் ஏற்பட்டிருக்காது என்றால் அதுபற்றி யூகிக்க முடியாது. நான் எனதுமகன் மாதம் ரூ.50,000 வருமானம் ஈட்டியதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால்சரியல்ல. எனதுமகனின் கனரக வாகன ஓட்டுநர்உரிமத்தை தாக்கல்செய்துள்ளேன். எனக்கு இன்னொரு மகன் உள்ளார் என்றால்சரிதான். நான் தாக்கல்செய்துள்ள வாரிசு சான்றில் எனது பெயரும் எனது மனைவியின் பெயர் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்சரிதான். 3 ம் மனுதாரருக்கு திருமணம் ஆகிவிட்டது. வழக்கில் அதிக நஷ்டஈட பெறவேண்டும் என்பதற்காக எனது மகன் அதிகமாக சம்பாதித்தாக மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது மகன் இலவசமாக ஆட்டோவில் பயணம் செய்ததாலும் அந்த ஆட்டோவின் ஓட்டுநருக்கு ஓட்டுநர்உரிமம் இல்லாததாலும் 2 ம் எதிர்மனுதாரர் நிறுவனம் காப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால்சரியல்ல. 2 ம் எதிர்மனுதாரரைப் பொருதது இந்த மனு தள்ளுபடிக்குரியது என்றால்சரியல்ல. நான் கோரியுள்ள நஷ்டஈடு மிக அதிகம் அது எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால்சரியல்ல.

4 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. எனது மகன் பயணம் செய்த ஆட்டோவை அறிவழகன் என்பவர் ஓட்டினார. விபத்து கரூர் - திருச்சி தேசிய நெடுஞ்சாயில் நடந்தது. ஆட்டோவில் காட்டுப்புத்தூரிலிருந்து வாழைத்தார் ஏற்றிக்கொண்டு மாயனூர் வழியாக மார்க்கெட்டிற்கு சென்றுகொண்டிருந்தார். விபத்து கருப்பத்தூர் அருகே நடந்ததாக சொன்னார்கள். கருப்பத்தூர் மெயின்ரோட்டில் சுடுகாட்டின் அருகில் விபத்து நடந்ததாக சொன்னார்கள். அறிவழகன் தான் ஆட்டோவை ஓட்டிச்சென்றார். எனது மகன் எங்கள் வாழைத்தாரை அந்த ஆட்டோவில் ஏற்றியதால் அந்த ஆட்டோவில் டிரைவருடன் பயணம் செய்தார். எனதுமகன சென்ற ஆட்டோவில் டயர் வெடித்து நிலைத்தடுமாறி எதிரில் வந்த வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். விபத்திற்கு காரணம் எனதுமகன் பயணம் செய்த ஆட்டோவின் ஓட்டுநர் அறிவழகன் என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக காவல்நிலையத்தில் யார் புகார்ல கொடுத்தார் என்பது எனக்கு தெரியாது. சம்பவஇடத்தில் அறிவழகன் இறந்துவிட்டார் என்றால்சரிதான் முதல்தகவல் அறிக்கை அறிவழகன் மீதுதான் போடப்பட்டுள்ளது என்றால்சரிதான். 3 ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் தான் புகார் கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 3 ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் விபத்திற்கு காரணம் இல்லை என்பதால் அவரது காப்பீட்டு நிறுவனமான 4 ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால்சரியல்ல. அறிவழகன் சாலை விதிகளை மதித்து வாகனம் இயக்கவில்லை என்றால்சரியல்ல. எனதுமகனின் வயது வருமானம் தொழில் ஆகியவற்றைக் காட்டக்கூடிய ஆவணம் தாக்கல்செய்யவில்லை என்றால்சரியல்ல. எனவே 4 ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து இந்த மனு தள்ளுபடிக்குரியது என்றால்சரியல்ல.

4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒம்/தங்கவேல்

ஒம்/எம். சண்முக கனி
சார்பு நீதிபதி,
குளித்தலை.